தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

செவ்வாய்க்கிழமை, 1975 அக்டோபர் 28

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Police Training College.

*@ 1. THIRU L. BALARAMAN: Will the Hon. the Chief Minister be pleased to state with reference to the answer placed on the table of the House on 15th December 1972 to L.C. Question No. 42 (Unstarred):

(*a*) whether there is any proposal to shift the Police Training College at Vellore to Madras; and

(*b*) if so, the present stage of the proposal?

காவலர் பயிற்சிக் கல்லூரி

திரு. எல். பலராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், சட்ட மன்ற மேலவையில் 15—12—1972 ஆம் நாளன்று உடுக்குறியிடாத வினா எண் 42-க்கு வைக்கப்பட்ட விடையினையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேலூரில் உள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியை சென்னைக்கு மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

@ 24—10—1975-ம் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) வேலூரிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியை வேறிடத்திற்கு மாற்றுவதற்கான செயற் குறிப்பை அரசு ஆய்வு செய்து, இந்தச் செயற் குறிப்பை ஒத்திப்போட வேண்டுமென முடிவு செய்துள்ளது.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வேலூரி லிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவது என்பதை ஒத்திப் போட்டிருந் தாலும், வேலூரிலிருந்து மாற்றுவது என்ற நோக்கம் ஏன் வந்தது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, வேலூரிலே இடவசதி குறைவாக இருப்பதாலும், சென்னையிலிருந்து 20 மைல் தூரத்தில் உள்ள அலமாதியில் அணி வகுப்புப் பயிற்சிக்கும், விளையாடு வதற்கும், மிகப் பரந்த அளவுக்குப் பெரியதாக இடமும், பெரிய கட்டிடங்களும் அங்கு இருப்பதாலும், இந்த இடம் சென்னைக்கு மிக அருகாமையிலே இருக்கின்ற காரணத்தினால், காவல் துறை அதிகாரிகளும், காவல் துறை புகழ் பெற்ற வல்லுநர்களும் சென்று வர வசதியாக இருக்கும் என்ற காரணத்தினாலும் அலமாதிக்கு மாற்றலாம் என்று அரசின் குறிப்பில் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இவ் வளவு வசதிகள் சென்னைக்கு அருகில் இருந்தும்கூட, வேலூருக்கு மாற்றலாம் என்ற நோக்கம் எப்படி வந்தது என்பதுபற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அலமாதிக்குத் தான் மாற்று கிறோம். வேலூருக்கு மாற்றவில்லை. வேலூரிலிருந்துதான் அலமாதிக்கு மாற்றுவதாக உத்தேசம். அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக் கின்றன. இந்த ஆண்டு நிதிநிலை பற்றாக்குறை காரணமாக ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

திரு. எல்.பலராமன்: இதை விரைவாக மாற்ற வேண்டும். எத்தனை ஆண்டுகளில் இதை மாற்ற வேண்டுமென்று செயற்குறிப்பில் இருக்கின்றது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு அங்கத்தினர் அவர் களுடைய ஆர்வத்தின் அடிப்படையில் வெகு விரைவிலே இது நடைபெறு மென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இதை முக்கியமாக மாற்ற வேண்டு மென்று அரசு முடிவு செய்திருக்கிறது. திருச்சி போன்ற தமிழ் நாட்டுக்கு

மத்திய பகுதியில், காவிரி ஓடுவதால், அங்கு ஜலக் கஷ்டமும் இல்லை, உணவுக் கஷ்டமும் இல்லை. இந்த மத்தியப் பகுதியிலே ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைநகரமான சென்னைக்கு அருகிலே இந்தக் காவல் துறை அதிகாரிகள் பயிற்சிக்கான கல்லூரிகள், பள்ளிகள் இருப்பது சாலப் பொருத்தமாகும். ஆகவே சென்னைக்கு அருகிலேயே அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

Police Constables arrested for robbery.

* @2 Q.—THIRU C. RUSSEL RAJ (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether two Policemen attached to the Kilpauk Traffic Station, Madras, have been arrested in connection with theft charges; and

(b) if so, whether cases have been filed against them?

திருட்டுக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட காவலர்கள்

திரு. சி. ரஸ்ஸல் ராஜ் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை கீழ்ப்பாக்கத்தில் போக்குவரத்து நிலையத்தில் பணி புரிந்த இரண்டு காவலர்கள் திருட்டுக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 3—1—1975 அன்று நடந்த வழிப்பறியில் கீழ்ப்பாக்கம் போக்குவரத்துக் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் ஒருவர் மட்டுமே சம்பந்தப்பட்டிருந்தார். வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

Tamil Pandits.

* 31 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the Government have passed an order in G.O. Ms. No. 1354, Education, dated 24th August 1972 in

@ 24—10—1975-ம் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.